ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**துறையூர் ஓங்காரக்குடிலிற்கும் ஓங்காரக்குடிலின் நிர்வாகம்**
**தொண்டர் பெருமக்கட்கும் அன்னதான சேவைக்கும்**
**விசுவாவசு ஆண்டு ஐப்பசி திங்கள் பௌர்ணமி விழாவிற்கும் உண்டான**
**பொது ஆசி விளக்கம்**

05.11.2025

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அறிவிப்பேன் அரங்கன் யான் அருளாசி
வரமென ஓங்காரக்குடிலின் ஐப்பசி மாத
பௌர்ணமி விழா குறித்து இதனொடு அன்னதான சேவைக்கும்

2. குடிலின் நிர்வாகத்திற்கும் தொண்டர் பெருமக்கட்கும்
இனிதே அரங்கன் யான் ஆசிதனை அருள்வேன்
சிறப்புற அரங்கன் என் ஆசியோடும்
ஆறுமுகப்பெருமான் சூட்சும தலைமையோடும்

3. வல்லமைபட மகான்களெல்லாம் புடை சூழ
ஓங்காரக்குடிலில் ஐப்பசி மாத
முழுமதி பூஜை விழா மிக சிறப்பாக நிறைவேறியது
வல்லமைபட இவ்விழாவில் மகா சக்திகளெல்லாம்

4. கலந்து கொண்டு ஓங்காரக்குடிலின் அன்னதானம்
அருமருந்தாக ஆற்றல் பெருக ஆசிபட
இனிதே அன்னதானமும் சிறப்புற
நடந்தேறியது வகைபட மக்களோடு மக்களாக

5. மகான்களும் சூட்சும வடிவிலே வந்து
இன்று விழாவில் கலந்து கொண்டு
விழாவின் அன்னதானத்தில்
அருளமுதை உண்டு இனிதே

6. ஆசி தந்து சென்றுள்ளனர் அப்பா
அப்பனே ஓங்காரக்குடிலின் நிர்வாகம் சிறப்பு
உயர்வுபட நிர்வாகிகள் வகை சார்பு
ஓங்காரன் சூட்சுமம்பட உற்ற துணையாயிருந்து வழிநடத்த

7. தர்மம் படவும் தயவோடவும் நிர்வாகங்கள்
சிறந்து நிற்க குடிலின் அன்னதானம் சிறப்போடு
தடைபடா வண்ணம் நாளும்
மக்கள்கள் பெருக வருகை கூடிட

8. இனிதே வல்லமைபட அரங்கன் யான்
அதற்குண்டான பொருளாதார பலமும்

தொண்டர்களுடைய ஊக்கமான உழைப்பின்
பலமும் கூட்டி இனிதே காத்தருள் புரிகின்றேன்

9. குடிலின் அருமருந்தை உண்பதாலே
வருவோர்க்கெல்லாம் பிணி சோடை
அத்தனையும் நீங்கி ஆரோக்கியம் ஆயுள்பலம்
சர்வ பலமும் கண்டடையக் கூடும்

10. இனிதே இவ்விழா நன்னாளில்
ஞானியர்களெல்லாம் ஒன்று கூடி
ஆசி தந்ததாலே கலந்து கொண்ட
மக்கட்கெல்லாம் அவர்களுடைய

11. கர்மவினை நீக்கம் பெறுவதோடு
ஏவல் அதர்வண எதிர்மறை
சக்திகளெல்லாம் விலகி ஓடி
வரும் அன்பர்கட்கு இடைகண்டம்

12. போன்ற பிணி சோடைகளும் நீங்கி
ஆரோக்கியம் பலம் ஆயுள் கீர்த்தி
கண்டடையக் கூடும் இதனொடு
அவரவர்கள் வேண்டி வரம் கேட்டு

13. வந்த வண்ணம் திருமண தடை விலகியும்
புத்திர வரம் சார்ந்த நோக்கங்கள்
அவரவர்க்கு அரங்கேறியும்
வல்லமைபட தொழில் தனகீர்த்தி

14. காரிய அனுகூலமொடு கடன் கட்டம்
எதிரி தொல்லை பிணி சோடை
இல்லாத வண்ணம் அவர்களெல்லாம்
வந்து சென்ற அன்பர்கள் அத்துணைபேருக்கும்

15. சர்வ வரமும் ஞானிகள் ஆசியாக
தந்துள்ளனர் உள்ளபடி அரங்கன்
என் ஆசியோடும் ஓங்காரக்குடிலின்
தொடர்பு கொண்டு வருவோர்க்கெல்லாம்

16. இனிதே அருள் பலமும்
பொருள் வளமும் ஞானபலமும்
இனி பிறவாத பெரும்பேற்றுக்கு
உண்டான உயர் கதியும்

17. உயர் கதியும் கிட்ட நேரும்
வகைபட இன்று அரங்கன் யான்

வரம் தந்தேன் என் குடில் நோக்கி வந்து
அனுகூலம் பெற்றவர்க்கெல்லாம் வரும் பிறவியில் இனி

18. பிறவிப் பிணி தொடராத வண்ணம்
மோட்சகதி நிலையடைய அருள் புரிவேன்
வல்லமைபட ஓங்காரக்குடிலின் தர்மம்
உலகையே மாற்றும் மாதர்மமாக இருக்க

19. ஒவ்வொரு கிளை சங்கங்களிலும்
ஏற்றுகின்ற ஜோதியில் அரங்கன்
யான் இறங்கி அற்புதம் நிகழ்த்துகின்றேன்
வகைபட அரங்கர் என் பலத்தால்

20. வல்லமைபட உலகமெங்கும் சன்மார்க்க
சங்க கிளைகள் பெருகி மாதர்மம்
விரிவடைய இனிதே இந்த உலகமே
தர்ம லோகமாகி அதர்ம சக்திகளனைத்தும்

21. அழிந்து ஞானவான்கள் தர்மவான்கள் பெருக
உலகமெங்கும் இனி ஞானஆட்சி காலமும் உதயமாகும்
அரங்கன் என் ஆசியோடு
எல்லா வகையும் உலகம் ஏற்றம் கண்டு

22. அரங்கன் என் அவதார
நோக்கமாக அனைத்தும் சித்தியாகும்
அரங்கமகான் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி